செ.வெ.எண்: 56/பிப்ரவரி நாள்: 27.02.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.40லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் தளம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா அவர்கள் ஆகியோர் திறந்து வைத்தனர்

--------------------

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் 26.02.2016 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா அவர்கள், ஆகியோர், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள "பேவர் பிளாக்" தளத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில், மருத்துவ சிகிச்சைக்காக வரும் பொதுமக்கள் பயன் பெறும் வகையில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.40லட்சம் மதிப்பீட்டில் புதிதாக "பேவர் பிளாக்" தளம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா அவர்கள் ஆகியோர் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 26.02.2016 அன்று திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவ பணிகளின் இணை இயக்குநர் (பொ) மரு.டி.கே.கிருஷ்ணமூர்த்தி, இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவர் திருமதி. எஸ்.கே.ஜி.எஸ். சந்தான லெட்சுமி, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் (மருத்துவம்) திரு.ஜெயதுரை, இராம்கோ தலைவர் திரு.செ.முருகேசன் உட்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**